அதிமுக முன்னாள் எம்எல்ஏ சுதர்சனம் கொலை வழக்கு

பவாரியா கொள்ளையர்கள் 3 பேருக்கு ஆயுள் தண்டனை

சென்னை கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, நவ. 25: கும்மிடிப்பூண்டி தொகுதி முன்னாள் அதிமுக எம்.எல்.ஏ. கே.சுதர்சனம், பவாரியா கொள்ளையர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் 3 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சென்னை கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அதிமுக எம்.எல்.ஏ.வாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராகவும் இருந்தவர் சுதர்சனம். கடந்த 2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் தேதி அதிகாலை 2.45 மணிக்கு, பெரியபாளையம் அருகே தானாக்குளத்தில் உள்ள அவரது வீட்டின் கதவை உடைத்து புகுந்த 5 பேர் கும்பல், சுதர்சனத்தை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு, அவரது மனைவி மற்றும் மகன்களை தாக்கி 62 சவரன் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றது.

இதையடுத்து, அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, கொள்ளையர்களைச் சுட்டுப்பிடிக்க உத்தரவிட்டார். குற்றவாளிகளைப் பிடிக்க ஐஜி ஜாங்கிட் தலைமையில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. மிகத் தீவிரமாகச் செயல்பட்ட தனிப்படை, அடுத்த மாதத்திலேயே கொள்ளையர்கள் யார் எனக் கண்டுபிடித்தது. முக்கியக் குற்றவாளியை பிப்ரவரி 1ம் தேதி கைது செய்தது.

தொடர்ந்து துப்புதுலக்கி மார்ச் மாதத்தில் அரியானா, ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த பவாரியா கொள்ளையர்களை கைது செய்தனர். செப்டம்பரில் முக்கியக் குற்றவாளிகள் இருவர் வடமாநிலத்தில் என்கவுன்ட்டர் செய்யப்பட்டனர். இந்த வழக்கில் தனிப்படை போலீஸார், 32 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இவர்களில் அரியானா மாநிலத்தைச் சேர்ந்த ஓம்பிரகாஷ், அவரது சகோதரர் ஜெகதீஷ் உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் ஜாமீன் பெற்ற மூன்று பெண்கள் தலைமறைவாகி விட்டனர்.

கைது செய்யப்பட்ட ஓம்பிரகாஷ் பவாரியா உள்பட இருவர் சிறையிலேயே இறந்து விட்டனர். மீதமுள்ள ஜெகதீஷ், ராகேஷ், அசோக் மற்றும் ஜெயில்தார் சிங் ஆகிய நான்கு பேருக்கு எதிரான வழக்கு சென்னை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள சென்னை கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி ஆப்ரஹாம் லிங்கன் முன்பு விசாரணைக்கு வந்தது.

▶ கும்மிடிப்பூண்டி முன்னாள் எம்எல்ஏ சுதர்சனம் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பவாரியா கொள்ளையர்கள் 3 பேரை போலீசார் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த விசாரணையில் 86 பேர் காவல் துறை சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். காவல்துறை தரப்பில் வழக்கறிஞர் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஜி.சீனிவாசன் ஆஜாரனார். அனைத்து தரப்பு விசாரணையும் முடிந்த நிலையில், ஜெகதீஷ் உள்பட நான்கு பேருக்கு எதிரான இந்த வழக்கில் நீதிபதி கடந்த 21ம் தேதி தீர்ப்பளித்தார். அதில், ஜெகதீஷ், ராகேஷ், அசோக் ஆகிய 3 பேரும் குற்றவாளிகள், வரும் 24ம் தேதி அவர்களுக்கான தண்டனை விபரம் அறிவிக்கப்படும். ஜெயில்தார் சிங் விடுதலை செய்யப்படுகிறார் என்று கூறியிருந்தார்.

இதையடுத்து, நேற்று தண்டனை விபரங்களை அறிய குற்றவாளிகள் ஜெகதீஷ், ராகேஷ், அசோக் ஆகியோரை போலீசார் நீதிமன்ற அறைக்கு பலத்த பாதுகாப்புடன் கூட்டிவந்தனர். இதையடுத்து, மாலை 5.30 மணிக்கு நீதிபதி தண்டனை விபரங்களை அறிவித்தார். அதில், ஜெகதீஷ், ராகேஷ், அசோக் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

தண்டனை விபரம்...

ஜெகதீசுக்கு இந்திய தண்டனை சட்டம் பிரிவு 397 (கொள்ளையடிக்கும் போது கொலை), இந்திய தண்டனை சட்டம் பிரிவு 396 (கூட்டுக்கொள்ளையின் போது கொலை) இந்திய தண்டனை சட்டம் பிரிவு 109 (குற்றத்திற்குதூண்டுதல்) ஆகிய 3 பிரிவுகளில் தலா ஒரு ஆயுள் தண்டனையும் ரூ.40 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது.

ராகேசுக்கு இந்திய தண்டனை சட்டம் பிரிவு 397 (கொள்ளையடிக்கும் போது கொலை), இந்திய தண்டனை சட்டம் பிரிவு 396 (கூட்டுக்கொள்ளையின் போது கொலை), இந்திய தண்டனை சட்டம் பிரிவு 109 (குற்றத்திற்கு தூண்டுதல்), ஆயுத தடை சட்டம் ஆகிய 4 பிரிவுகளில் தலா ஒரு ஆயுள் தண்டனையும் ரூ.50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது.

அசோக்குக்கு இந்திய தண்டனை சட்டம் பிரிவு 397 (கொள்ளையடிக்கும் போது கொலை), இந்திய தண்டனை சட்டம் பிரிவு 396 (கூட்டுக்கொள்ளையின்போது கொலை). இந்திய தண்டனை சட்டம் பிரிவு 109 (குற்றத்திற்கு தூண்டுதல்) ஆகிய 3 பிரிவுகளில் தலா ஒரு ஆயுள் தண்டனையும் ரூ.40 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆயுள் தண்டனைகளை தனித்தனியாக அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தீபத்திருநாளில் ஒளிரக்காத்திருக்கும் அகல் விளக்குகள்

▶ திருக்கார்த்திகை தீபத்திருநாளில் வீதியெங்கும் ஒளிரக்காத்திருக்கும், விதவிதமான அகல்விளக்குகள் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளது. இடம்: பழைய பேருந்து நிலையம், வேலூர்.

நீர்நிலை நிலவர ஆலோசனை கூட்டம்

மண்டல பொறியாளர்களுக்கு அமைச்சர் துரைமுருகன் அறிவுறுத்தல்

சென்னை, நவ.25: சென்னை தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையினால் தற்போது நீர்நிலைகளில் உள்ள நீர் இருப்பு நிலவரங்கள், எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்பு விவரங்கள் குறித்து அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்களுடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

நீர்நிலைகள் பாதுகாப்பு மற்றும் வெள்ள பாதிப்பு ஏற்படாத வகையில் கொள்ளளவிலிருந்து 20% வரை தண்ணீரை குறைப்பது உள்ளிட்ட பல்வேறு அறிவுறுத்தல்களை அனைத்து மண்டல பொறியாளர்களுக்கும் அமைச்சர் துரைமுருகன் வழங்கினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் அரசு செயலாளர் ஜெயகாந்தன், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) கோபாலகிருஷ்ணன் மற்றும் சென்னை மண்டல பொறியாளர்கள், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மண்டல பொறியாளர்கள் காணொலி காட்சி வாயிலாகவும் கலந்துகொண்டனர்.

எஸ்ஐஆர்க்கு காலக்கெடு நீடிப்பு இல்லை...

முதல் பக்க தொடர்ச்சி

திருத்த செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து, குறிப்பாக மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் மற்றும் அதன் டிஜிட்டல் முறை உள்ளீடு குறித்து மதிப்பாய்வு செய்வதற்காக கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஆய்வு பணிகளை செய்தார். இதேபோல், மதுசூதன் குப்தா சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு சில தொகுதிகளுக்கு நேற்று நேரில் சென்று சிறப்பு தீவிர திருத்தம் பற்றி ஆய்வு செய்தனர்.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) தொடர்பாக சென்னை, தலைமை செயலகத்தில் நேற்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் 6.41 கோடி வாக்காளர்களில் 6.16 கோடி வாக்காளர்களுக்கு எஸ்ஐஆர் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 50% வரை திரும்பப் பெறப்பட்டுள்ளன. எந்த விசாரணையும் இன்றி வாக்காளர் பட்டியலில் இருந்து யாரையும் நீக்க முடியாது. டிசம்பர் 4ம் தேதியுடன் இந்த பணிகள் முடிவடையும். எஸ்ஐஆர் பணிகளை குறிப்பிட்ட தேதிக்குள் (டிசம்பர் 4ம் தேதி) முடிக்க வேண்டும். கூடுதல் அவகாசம் கொடுக்க வாய்ப்பில்லை. படிவங்களை பெற்ற வாக்காளர்கள் முடிந்தவரை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். சென்னையில் 96 சதவீதம் அளவுக்கு எஸ்ஐஆர் படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மக்களுக்கு அளிக்கப்பட்ட கணக்கீட்டு படிவங்களில் 50 சதவீதம் திரும்ப பெறப்பட்டுள்ளன. 2 லட்சம் விண்ணப்பங்கள் ஆன்லைனில் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் எஸ்ஐஆர் படிவத்தில் நிச்சயம் பெயர் இருக்கும். கணக்கீட்டுப் படிவங்களில் தகவல்கள் சரியாக இருந்தால் எந்த படிவமும் நிராகரிக்கப்படாது. பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்தால் உரிய காரணம் தெரிவிக்கப்படும். பெயர் இடம்பெறாவிட்டால் காரணம் தெரிவிக்க வேண்டும். வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 9ம் தேதி வெளியான பிறகு விடுபட்டவர்கள் கண்டிப்பாக மீண்டும் புதிதாக சேர்க்கப்படுவார்கள்.

எஸ்ஐஆர் ஆன்லைன் சர்வர் சரியாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒருவர் தவறான ஆவணத்தை கொடுக்கிறார் எனில் அதை பி.எல்.ஓக்கள்தான் (வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள்) கண்டுபிடிக்க முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பாஜவின் முழு கட்டுப்பாட்டுக்குள் தேர்தல் ஆணையம்

தேர்தல் ஆணையமும் பாஜவும் ஒரே நிறுவனமாக மாறியுள்ளது

விசிக தலைவர் திருமாவளவன் பேச்சு

சென்னை, நவ.25: சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே எஸ்ஐஆர்-ஐ கண்டித்து விசிக தலைவர் திருமாவளவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் எம்.பி. ரவிக்குமார், விசிக எம்எல்ஏக்கள் எஸ்.எஸ்.பாலாஜி, ஆளூர் ஷா நவாஸ் மற்றும் 500க்கும் மேற்பட்ட விசிகவினர் கலந்துகொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராகவும் தேர்தல் ஆணையத்தை கண்டித்தும் கண்டன கோஷங்களை எழுப்பினர். பின்னர் திருமாவளவன் பேசியதாவது:

பாஜ உள்நோக்கத்துடன் தான் எஸ்ஐஆரை கையாள்கிறது. மோடி, அமித்ஷா சராசரி அரசியல்வாதிகள் அல்ல, இந்த அதிகாரத்தை பயன்படுத்தி இந்தியாவை அடியோடு புரட்ட பார்கிறார்கள். எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்துவது, காங்கிரஸ் இல்லாத இந்தியாவை உருவாக்குது, இடதுசாரிகள் இல்லாத ஒரு இந்தியாவை உருவாக்குவது, திராவிட அரசியலைப் பேசக்கூடிய கட்சிகள் இல்லை என்பதை உருவாக்குவது என்பது தான் பாஜவின் செயல் திட்டம்.

அதிமுகவை பாஜ எப்படி கையாள்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். அதிமுக கட்சி விவகாரத்தை தான் டெல்லியில் பேசினார்கள் என செங்கோட்டையன் கூறினார். தேர்தல் தில்லுமுல்லுகளை தேர்தல் ஆணையத்தின் மூலம் செய்து காண்பிக்கும் பாஜ. பாஜவின் முழு கட்டுப்பாட்டுக்குள் தேர்தல் ஆணையம் உள்ளது. தேர்தல் ஆணையமும் பாஜவும் ஒரே நிறுவனமாக மாறியுள்ளது.

தீபத்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது...

முதல் பக்க தொடர்ச்சி

அனுமதிக்கப்பட்டனர். மூன்றாம் பிரகாரம் முழுவதும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டத்தால் நிறைந்திருந்தது. விழாவில், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கலெக்டர் தர்ப்பகராஜ், எஸ்பி சுதாகர், கோயில் ஆணையர் பரணிதரன், தக்கார் மீனாட்சிசுந்தரம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

கார்த்திகை தீபத் திருவிழா உற்சவம் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற உள்ளது. அதையொட்டி, தினமும் காலை மற்றும் இரவில் சுவாமி மாட வீதியுலா நடைபெறும். மேலும், விழாவின் முக்கிய நிகழ்வுகளான வெள்ளித் தேரோட்டம் வரும் 29ம் தேதியும், மகா தேரோட்டம் வரும் 30ம் தேதியும் நடைபெறும்.

விழாவின் நிறைவாக, டிசம்பர் 3ம் தேதி அதிகாலை 4 மணிக்கு அண்ணாமலையார் கோயிலில் ஏகன் அநேகன் எனும் தத்துவத்தை உணர்த்தும் வகையில் பரணி தீபம் ஏற்றப்படும். அதைத்தொடர்ந்து, அன்று மாலை 6 மணிக்கு 2,688 அடி உயர அண்ணாமலை மீது மகா தீபம் ஏற்றப்படும்.

மகா தீபம் ஏற்றுவதற்காக, 4,500 கிலோ நெய், செப்பு கொப்பரை, ஆயிரம் மீட்டர் திரி ஆகியவை பயன்படுத்தப்படும். தீபத்திருவிழாவில், இந்த ஆண்டு சுமார் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதையொட்டி, 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர். மேலும், பக்தர்களின் வசதிக்காக 5484 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

மேலும், 24 இடங்களில் தற்காலிக பஸ் நிலையங்கள் அமைக்கப்படுகிறது. அதோடு, வழக்கமாக இயங்கும் 14 ரயில்கள் மட்டுமின்றி கூடுதலாக 16 சிறப்பு ரயில்கள் இயக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கார்த்திகை தீபத்திருவிழாவை தரிசனம் செய்ய ஏராளமான பக்தர்கள் திரண்டு வருவதால், திருவண்ணாமலை நகரம் விழாக்கோலமாக காட்சியளிக்கிறது.

SPECIAL BUILDINGS DIVISION - II
PUBLIC WORKS DEPARTMENT, PUDUCHERRY

No.13/PW/SBD-II/DB/D5/Tender/2025-26 Puducherry, the 24.11.2025

PRESS NOTICE FOR e-Tender

e-Tender No.72 to 74/PW/SBD-II/2025-26

On behalf of the President of India, the Executive Engineer, Special Buildings Division-II, Public Works Department, Puducherry e-Tenders are invited for 3 (Three) works vide Tender Notice No.13/PW/SBD-II/DB/D5/Tender/2025-26 dt.24.11.2025. For further details, please refer to the website **https//:pudutenders.gov.in.**

(No.574/DIP/AD(Press)/2025-26)

EXECUTIVE ENGINEER

பென்ட்லென்ட் அரசு மருத்துவமனை அருகே

பிறந்த பச்சிளம் பெண் குழந்தை கால்வாயில் வீசி கொலை

வேலூரில் பரபரப்பு

வேலூர், நவ.25: பிறந்த பச்சிளம் பெண் குழந்தை, வேலூர் பென்ட்லென்ட் அரசு மருத்துவமனை அருகே உள்ள கால்வாயில் வீசி கொலை செய்யப்பட்ட சம்பவத்தால் நேற்று பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வேலூர் பென்ட்லென்ட் அரசு மருத்துவமனை சாலையில் நேற்று காலை பொதுமக்கள் சிலர் சென்றனர். அப்போது அருகே உள்ள கழிவுநீர் கால்வாயில் பெண் சிசு ஒன்று இறந்த நிலையில் மிதந்து கொண்டு இருந்தது. இதைக்கண்டவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து வேலூர் தெற்கு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அங்கு கால்வாயில் வீசப்பட்டிருந்த பெண் சிசு உடலை மீட்டனர். விசாரணையில் குழந்தை நேற்று தான் பிறந்திருக்கும் என்பது தெரிய வந்தது. இதையடுத்து சடலத்தை பிரேதபரிசோதனைக்காக பென்ட்லென்ட் அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணையை தொடங்கினர்.

▶ வேலூர் ஜிபிஎச் சாலை கழிவுநீர் கால்வாயில் வீசப்பட்டு கிடக்கும் பச்சிளம் பெண் குழந்தை சடலத்தை வேதனையுடன் பார்க்கும் பொதுமக்கள்.

இந்த குழந்தை அரசு, அல்லது தனியார் மருத்துவமனையில் பிறந்ததா? அல்லது வேறு எங்காவது பிறந்த குழந்தையை கால்வாயில் வீசினார்களா? கள்ளக்காதலில் பிறந்ததால் இந்த சம்பவம் நடந்ததா? பெண் குழந்தை என்பதால் கால்வாயில் வீசி இந்த கொடூர கொலையில் ஈடுபட்டார்களா? இதை வீசி சென்றவர்கள் யார்? என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அங்குள்ள சிசிடிவி கேமராவில் குழந்தையை வீசி சென்றவர்களின் உருவம் பதிவாகியுள்ளதா எனவும் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும் போலீசார், குழந்தையை வீசி கொன்ற கல்நெஞ்சம் படைத்தவர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். இதுகுறித்து தகவலறிந்த டிஎஸ்பி (பொறுப்பு) திருநாவுக்கரசு, இன்ஸ்பெக்டர் காண்டீபன் ஆகியோரும் சம்பவ இடம் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

ஆந்திராவில் இருந்து

மணல் கடத்திய 5 பேர் கைது

லாரி பறிமுதல்

வேலூர், நவ.25: ஆந்திராவில் இருந்து ஆற்று மணல் கடத்தி வந்த லாரியை மடக்கி பிடித்த போலீசார் 5 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

வேலூர் அடுத்த பாகாயம் 4 வழிச்சாலை சந்திப்பில், பாகாயம் போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜன் தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் இரவு சுமார் 11 மணியளவில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது வேலூரில் இருந்து கணியம்பாடி நோக்கி வேகமாக சென்ற டிப்பர் லாரியை மடக்கி சோதனையிட்டனர். சோதனையில் டிப்பர் லாரியில் ஆற்று மணல் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து மணலை கடத்தி வந்த பாகாயம் எம்ஜிஆர் நகரை சேர்ந்த டிப்பர் லாரி டிரைவர் வெங்கடேசன்(28), பிரவீன்குமார்(29), செதுவாலையை நந்தகுமார்(28), விருபாட்சிபுரத்தை சேர்ந்த சந்திரசேகர்(40), ராஜேஷ்(42) ஆகிய 5 பேரை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் என்.ஆர்.பாளையம் பகுதியில் உள்ள பொன்னையாற்று அரசு மணல் குவாரியில் இருந்து மணலை வாங்கி சட்டவிரோதமாக தமிழகத்துக்கு வள்ளிமலை, சேர்க்காடு, காட்பாடி வழியாக கடத்தி வந்தது தெரியவந்தது. இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்த பாகாயம் போலீசார் பிடிப்பட்ட 5 பேரையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். லாரியை பறிமுதல் செய்தனர்.

PONDICHERRY UNIVERSITY

(A Central University – Accredited "A+" Grade by NAAC)

PH.D. ADMISSIONS 2026-27

ENTRANCE EXAMINATION CATEGORY

Online applications are invited for admission to Ph.D. Programmes in various disciplines under entrance examination category.

ELIGIBILITY

Only those candidates who have studied under 10+2+3+2 pattern of education (or 10+2+5) and qualified for the Master's Degree in the subject concerned or in an allied subject and have qualifications as prescribed by the regulations for the subject concerned under all the Schools/ Departments/ Centres of Humanities and Social Sciences, Management, Commerce, Science, Education, Fine Arts and Languages and such other disciplines of Pondicherry University, or a degree accepted as equivalent by the University securing a minimum of 55% marks (or equivalent grade) are eligible to apply.

Final Year PG students are also eligible to apply.

DOCTORAL PROGRAMMES AT UNIVERSITY DEPARTMENTS

For details including courses offered, eligibility and reservation policy, please refer Information Brochure in the University website https://www.pondiuni.edu.in.

APPLICATION PROCEDURE

Application form is to be submitted online through the University website www.pondiuni.edu.in by following the instructions given therein.

MODE OF SELECTION

Based on the marks obtained in the entrance examination and the Interview conducted by the concerned Departments /Centres

APPLICATION FEE

Name of the Course	Application fee (per Course) in Rupees		
	SC*/ ST*	PH**/ Transgender**	Others
Ph.D	750	Nil	1500

* subject to submission of relevant certificate.
** Subject to submission of relevant certificate from Govt. Medical Officer.

Use separate application for each programme. Payment of Application fee can be made only through online mode

Any claim based on wrong information, wrong course code, centre code, category (OBC/SC/ST/EWS/Gen), etc. will not be entertained at a later stage.

IMPORTANT DATES

Online Registration starts on 19th November 2025

Last Date for Online Registration on 30th December 2025

REGISTRAR (i/C)

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புதூர், தமிழ்நாடு-641018.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26.12.2025 நாளில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (மு.வி.–ல் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நிதிசார் வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
2.	**கடன் எண். HL0111H19100010 & HM0111H18100028 S செந்தில்குமார் (கடன்தாரர்), ரேவதி செந்தில்குமார் (உப கடன்தாரர்)**	அறிவிப்பு தேதி: 22.03.2022 & 30.04.2022 **மொத்த நிலுவைத் தொகை:** தேதியில் செலுத்த வேண்டிய தொகை **ரூ.1,45,728.22/–** (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று இருபத்து எட்டு மற்றும் பைசா இருபத்திரண்டு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 15% வட்டி. 30/04/2022 தேதியில் செலுத்தப்பட வேண்டிய தொகை **ரூ.7,75,595.31/–** (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்தைந்து ஆயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றைந்து மற்றும் பைசா முப்பத்தொன்று மட்டும்)	நேரடி	வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், பள்ளிக்கொண்டா சார் பதிவு மாவட்டம், ஆம்பூர் வட்டம், அகரம்சேரி கிராமம், நத்தம் பழைய S.No. 544, புதிய S.No. 544/2 இல் அமைந்துள்ள நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதியில் அமைந்துள்ள நிலம் அசையாச் சொத்தின் அனைத்து துண்டு அல்லது பகுதி. இதில் நிலம் எல்லைகள்: மேற்கில்: சாலை, கிழக்கில்: ஜோசப்புக்குச் சொந்தமான வீடு, தெற்கில்: பெரியசாமிக்குச் சொந்தமான வீடு, வடக்கில்: பாதை. இதில் அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக 25 அடி, வடக்கிலிருந்து தெற்காக 35 அடி. மொத்தத்தில் 875 சதுரடி அல்லது 81.29 ச.மீ. மேலும் அதில் அமைந்துள்ள கட்டுமானம் மற்றும் சேவை இணைப்புகள். மேலும் மனையின் எல்லைகள்: **கிழக்கு:** ஜோசப் அவர்களுக்கு சொந்தமான வீடு, **மேற்கு:** சாலை; **வடக்கு:** பாதை, **தெற்கு:** பெரியசாமி அவர்களுக்கு சொந்தமான வீடு.	**Rs. 16,07,813/–** (ரூபாய் பதினாறு லட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று பதின்மூன்று மட்டும்)	**Rs. 1,60,781.3/–** (ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரத்து எழுநூற்று எண்பத்து ஒன்று மற்றும் பைசா முப்பது மட்டும்)	19.12.2025 மாலை 5.00 மணிக்கு முன்னதாக	10,000/-	24/12/2025 (11AM – 4PM)	26/12/2025 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, **தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222** மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்ட